People's Watch
No.6, Vallabai Road, Chokkikulam, Madurai - 625 002.
Phone: 0452-2531874 & 2539520 Fax: 0452- 2531874
E.mail: info@pwtn.org Web: www.pwtn.org

**மாண்புமிகு. தமிழக முதல்வர் அவர்கள்,**
தமிழ்நாடு அரசு,
தலைமைச் செயலகம்,
சென்னை 600 009.

பேரன்புடையீர்

மக்கள் கண்காணிப்பகத்தின் இனிய வணக்கங்கள்.

மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு மக்கள் கண்காணிப்பகம் அமைப்பு கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக மனித உரிமை செயல்பாட்டுத் தளத்தில் இயங்கி வருகிறது. கடந்த ஆண்டு முதல் சித்ரவதைத் தடுப்பிற்கான தேசியத் திட்டத்தில் இந்தியா முழுவதிலுமுள்ள 10 மாநிலங்களிலும் செயல்பட்டு வருகிறது.

எவ்வித அரசியல் கட்சி சார்புமின்றியும், தனி நபர் மீதான விருப்பு, வெறுப்புக்களைக் கடந்தும், மனித உரிமை அரங்கில் அரசைக் கண்காணித்து மனித உரிமைக் கலாச்சாரத்தை வளர்த்தெடுக்கும் விதமாக எங்களது பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

தாங்கள் இச்சம்பங்களில் உடனடியாக தலையிட்டு உரிய நடவடிக்கைள் மேற்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

நம்பிக்கையுடன் மனித உரிமைப் பணியில்

(ஹென்றி டிபேன்)
நிர்வாக இயக்குநர்

நகல்கள்

1. அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும்
2. அனைத்து மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளர்களுக்கும்
3. அனைத்து அரசியல் கட்சிகளுக்கும்

மக்கள் கண்காணிப்பகம்

# தமிழகத்தில் மனித உரிமை மீறல்கள் – தொகுப்பு
# 15.11.2009 முதல் 21.11.2009 முடிய

| வ. எண் | செய்தி கிடைத்த நாள் | மாவட்டம் / பெயர் விபரம் மற்றும் சம்பவ விபரம் | பிரிவு | தகவல் பெற்றது. |
|---|---|---|---|---|
| 48. | 15.11.09 | **மதுரை மாவட்டம்:** மேலூர் அருகே திருவாதவூரில் அகதிகள் முகாமிள் குமார் மகள் தயாநந்தினி(22), இவரும், அதே பகுதியைச் சேர்ந்த ஜெகநாதனும் காதலித்து வந்தனர். தயாநந்தினி தன்னை திருமணம் செய்து வற்புறுத்திய போது காதலன் ஜெகநாதன் கைவிட்டதால் விஷம் குடித்து தற்கொலை செய்தார். இதுகுறித்து மேலுர் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | மாலைமலர் |
| 49. | 16.11.09 | **மதுரை மாவட்டம்:** அவனியாபுரத்தைச் சேர்ந்தவர் மனோரமா அவரது மகள் வேளாங்கண்ணி(24), அதே பகுதியைச் சேர்ந்தவர் பாலகண்ணன்(26) இருவரும் காதலித்து வந்தனர். பாலகண்ணன் வேளாங்கன்னியை திருமணம் செய்து கொள்ளுவதாக ஆசை வார்த்தைக் கூறி வேளாங்கன்னியை பாலியல் பலாத்காரம் செய்துள்ளார். இது குறித்து திருப்பரங்குன்றம் போலீஸ்சில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | மாலைமலர் |
| 50. | 16.11.09 | **கடலூர் மாவட்டம்:** கடலூர் அருகே பச்சையாங்குப்பம் நடுத்தெருவைச் சேர்ந்தவர் ராதா கிருஷ்ணன் இவரது மகள் இந்துமதி(19), இவரை அதே பகுதியைச் சேர்ந்த ராஜ்குமார். கார்டிரைவரான இவர் இந்துமதியை பாலியல் பலாத்காரம் செய்து கொலை செய்து மற்றும் தானும் தற்கொலை செய்து கொண்டார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | மாலைமலர் |
| 51. | 16.11.09 | **விழுப்புரம் மாவட்டம்:** வடக்கு தெருவைச் சேர்ந்தவர் சிவசுப்பிரமணியன் மாம்பழபட்டு கிராமத்தில் நகை அடகு கடை நடத்தி வருகின்றார். இவரது மனைவி விஜயலட்சுமி இவர்கள் இருவரிடையே ஏற்பட்ட குடும்ப தகராறில் சிவசுப்பிரமணியன் தன் மனைவி மீது குழவி கல்லை போட்டு கொலை செய்தார். இதுகுறித்து விழுப்புரம் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | மாலைமலர் |
| 52. | 17.11.09 | **மதுரை மாவட்டம்:** கே.கே நகரைச் சேர்ந்தவர் ராஜேஷ்கண்ணா இவருடைய மனைவி ஆனந்தி, இவர்களுக்கு 4 வயதில் பெண்குழந்தை உள்ளது. கணவன் மனைவியிடையே ஏற்பட்ட தகராறில் மனைவி தூக்குபோட்டு தற்கொலை செய்துகொண்டார். கணவரும் விஷம் குடித்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இது குறித்து அண்ணாநகர் போலீஸார் வழக்குப்பதிவு செய்து | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | விசாரணை நடத்தி வருகின்றனர். | | |
| 53. | 17.11.09 | **சென்னை மாவட்டம்:** ஆந்திராவுக்கு ரெயிலில் ரேசன் அரிசி கடத்தியவர்களிடம் R.P.F.போலீஸார் மூட்டைக்க 10ரூ லஞ்சம் வாங்கி கொண்டு கைது செய்யாமல் விடுகின்றனர். இதைபோல் தண்டவாளத்தை கடக்கும் போது பணம் பறிப்பதாக பயணிகள் புகார். | லஞ்ச ஊழல் | தினத்தந்தி |
| 54. | 17.11.09 | **திருப்பூர் மாவட்டம்:** உடுமலை அருகே திருமூர்த்தியைச் சேர்ந்தவர் நடராஜ், இவரது மனைவி பாப்பாத்தி இவரது மகள் செல்வி மற்றும் இரண்டு பேரன்களுடன் பாப்பாத்தி ஆகிய 4பேரும் விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்டனர். இது குறித்து போலீஸார் விசாரணை செய்து வருகின்றனர். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| 55. | 17.11.09 | **மதுரை மாவட்டம்:** மதுரை வெங்கடாசலபுரம் 3வது தெருவைச் சேர்ந்தவர் ரேவதி, இவரது கணவர் பால்பாண்டி அவரது சகோதரன் வீரபாண்டி, பாண்டி, பாஸ்கர், ஆகியோர் மதுரை தெற்கு ஆவணி மூல வீதியில் நகைகடை நடத்தி வருகின்றனர். இவர்களை மதுரை காட்டுபாட்டுஅறை போலீஸ் இன்ஸ்பெக்டர் ரவீந்திரன் மற்றும்10 காவலர்கள் வலுகட்டாயமாக தூக்கி சென்றதாக மதுரை ஐகோர்ட் கிளையில் மனுத்தாக்கல் செய்ததில் அவ்வழக்கில் மதுரை போலீஸ் கமிஷ்னர் பதிலளிக்க நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர். | காவல் நிலைய வன்முறை | தினத்தந்தி |
| 56. | 17.11.09 | **இராமநாதபுரம் மாவட்டம்:** கமுதி அருகே வேனில் கடத்தப்பட்ட 35 மூடை ரேசன் அரிசியை போலீஸார் பறிமுதல் செய்தனர். மற்றும் 3 பேரையும் கைது செய்தனர். | ரேசன் அரிசி கடத்தல் | தமிழ்சுடர் |
| 57. | 17.11.09 | **திண்டுக்கல் மாவட்டம்:** ஒட்டன்சத்திரம் அருகே கக்கம்பட்டியைச் சேர்ந்தவர் ஆண்டவன் இவரது மகள் சித்ராதேவி(15) இவரை சேலத்தைச் சேர்ந்த சீனிவாசன் என்பவரது மகன் மூருகன் கடத்தி சென்றதாக காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |
| 58. | 17.11.09 | **சிவகங்கை மாவட்டம்:** இடைய மேலூர் கிராமத்தில் தலீத் மக்கள் குடியிருக்கும் வீடுகள் இடிந்துவிழும் நிலையிலும் மழை பெய்தால் ஒழுகும் நிலையில் இருந்தவருவதை சரி செய்திட இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்தின் சார்பாக மாவட்ட ஆட்சியரிடம் மக்கள் குறை தீர்க்கும் நாளில் புகார் கொடுக்கப்பட்டது. | தலீத் எதிரான வன்முறை | ஜனசக்தி |
| 59. | 18.11.09 | **விருதுநகர் மாவட்டம்:** ராஜபாளையம் அருகே தெற்கு மலையடிபட்டி காமாட்சியம்மன் கோவில் தெருவைச் சேர்ந்தவர் ஞானம் இவரது ஒன்னரைவயது மகள் மகாலட்சுமியை கடத்தி | குழந்தைகளுக்கு எதிரான வன்முறை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சென்ற குழந்தைகளை கடத்தி வந்த கும்பலின் தலைவி செல்வியை போலீஸார் கைது செய்தனர். | | |
| 60. | 19.11.09 | **விருதுநகர் மாவட்டம்:** சிவகாசி அருகே திருத்தங்கல் செல்லாயி அம்மன் கோயில் தெருவைச் சேர்ந்தவர் தோப்பு கருப்புசாமி(30), இவர் திருத்தங்கல் நகராட்சி கவுன்சிலர் சில மாதங்களுக்கு முன்பு ராஜமுனியம்மாவிடம் 12,000 ரூபாய் வட்டிக்கு வாங்கி, ரூ.2000 திருப்பி கொடுத்துள்ளார். 2 மாதங்களாக வட்டி செலுத்தவில்லை இதனால் ராஜமுனியம்மா மற்றும் அவரது அடியாட்கள் கருப்புசாமியை தாக்கி, அவரது குழந்தையை கடத்தி சென்றார்கள். கருப்புசாமி கொடுத்த புகாரின் பேரில் திருத்தங்கல் போலீசார் வழக்கு பதிவு செய்து ராஜாமுனியம்மாள், மற்றும் அடியாட்களை தேடி வருகின்றனர். | கந்து வட்டி | தினகரன் |
| 61. | 19.11.09 | **நெல்லை மாவட்டம்:** சுரண்டையை சேர்ந்தவர் ரவிகுமார் உயர் நீதிமன்ற கிளையில் ஒரு மனு தாக்கல் செய்தார். சுரண்டை பஸ் ஸடாண்ட் ரோட்டில் பள்ளி, மருத்துவமனை கோயில்கள் உள்ளன அதன் அருகில் டாஸ்மார்க் கடை இருப்பதால் பொது மக்களுக்கு இடைஞ்சலாக இருப்பதாக மனுவில் கூறிப்பிட்டு இருந்தார். மனுவை வழக்காக எடுத்த நீதிபதிகள் விசாரிக்க வக்கீல் பினைஜோசை நியமித்தார். அவர் கொடுத்த அறிக்கையில் மருத்துவமனைக்கு 100 கிலோ மீட்டர் தூரத்தில் டாஸ்மார்க் கடை உள்ளதாக கூறினார். அதன் அடிப்படையில் குறிப்பிட்ட நாட்களுக்குள் டாஸ்மாக் கடையை எடுக்க நெல்லை கலெக்டருக்கு உத்தரவிட்டார். | கடன் தொல்லை | தினகரன் |
| 62. | 19.11.09 | **மதுரை மாவட்டம்:** கே.கே.நகரைச் சேர்ந்தவர் ராஜேஷ்கண்ணா, இவரது மனைவி ஆனந்தி(35), இவர் காரியாபட்டி தனியார் இன்ஜினியரிங் கல்லூரியில் பேராசியராக பணியாற்றுகிநார். கணவன் மனைவி இடையே ஏற்பட்ட தகராறில் ஆனந்தி தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். மனைவி இறந்ததால் மனமுடைந்த ராஜேஸ்கண்ணா, தானும் பினாயில் ஆசிட்டை குடித்து ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இது குறித்த அண்ணாநகர் போலீசார் வழக்குப் பதிவு செய்துள்ளனர். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 63. | 19.11.09 | **மதுரை மாவட்டம்:** கள்ளக்குடி அருகே சுந்தரக்குண்டு சேர்ந்தவர் பெருமாள், இவரது மனைவி கற்பகவள்ளி(20), அதே பகுதியைச் சேர்ந்த முத்துகண்ணன் என்பவர் | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கற்பகவள்ளியை வழிமறித்து சில்மிஷம் செய்ததாக கற்பகவள்ளி கள்ளிக்குடி போலீஸில் புகார். இது குறித்த போலீசார் முத்துகண்ணனை தேடி வருகிறார்கள். | | |
| 64. | 19.11.09 | **மதுரை மாவட்டம்:** மேலூர் அருகே கீழவளவு கக்கன் காலனியைச் சேர்ந்தவர் வீரபாண்டி, இவரது மனைவி அனிதா(20), வீரபாண்டி சென்னையில் கால்நடை மருத்துவராக பணியாற்றுகிறார். அனிதா தனது 2 வயது குழந்தையுடன் சென்னையில் உள்ள கணவரிடம் செல்வதாக சென்றவர் வீரபாண்டியிடம் போய் சேரவில்லை, இது குறித்து அனிதாவின் மூக்காயி கீழவளவு போலீஸில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 65. | 19.11.09 | **இராமேஸ்வரம் மாவட்டம்:** ராமேஸ்வரம் மீன்துறை அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரிகள் திடீர் சோதனை நடத்தினர். அதில் மீனவர் சங்க பொறுப்பாளர் சங்கரலிங்கம், மற்றும் அலுவலரான அகமத்துல்லாகான் 2பேரும் மீனவர்களுக்கு வழுங்கப்படும் நிதியில் இருந்து 50–100 எடுத்துக் கொண்டு மீதியை கொடுத்துள்ளனர். இதில் சங்கரலிங்கத்திடம் இருந்து கணக்கில் காட்டப்படாத ரூ.17,100–ஐ அவரிடம் இருந்து கைப்பற்றினர், இதே போல் அகமத்துல்லாகானிடம் இருந்து பணத்தை கைப்பற்றிய போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றர். | மீனவர்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |
| 66. | 19.11.09 | **விருதுநகர் மாவட்டம்:** ஸ்ரீவில்லிபுத்தூர் – மதுரை மெயின் ரோட்டில் அழகாபுரி 5 கண் பாலத்தின் அடியில் அடையாளம் தெரியாத ஒரு பெண் சடலம் கிடப்பதாக நத்தம்பட்டி போலீசாருக்கு தகவல் சடலத்தை கைபற்றிய போலீசார் விசாரித்தனர். விசாரணையில் சாத்தூர் அருகே காயில்பட்டியைச் சேர்ந்த சோட்டையூர் கிராமத்தைச் சேர்ந்தவர் டெய்லர்மாரிகாளை, என்பவரின் மனைவி முத்துமாரி(40), அவர் எல்.ஐ.சி. ஏஜெண்டு என்பதும் தெரியவந்தது. இவர் எதற்காக கொலை செய்யப்பட்டார் என போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |
| 67. | 19.11.09 | **இராமேஷ்வரம் மாவட்டம்:** இலங்கை கடற்படை தாக்குதலில் காயமடைந்த மீனவர்கள் முத்துமுனியாண்டி(27), ராஜேந்திரன்(30), சேகர்(37), அண்ணாதுறை(38), ஆறுமுகம்(43), இந்திய எல்லைக்குள் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது 20க்கும் மேற்பட்ட இலங்கை கடற்படையினர் எங்கள் படகில் இருந்து சுமார் 100 கிலோ மீன்களை எடுத்துக் கொண்டு | மீனவர்களுக்கு எதிரான வன்முறை | தமிழ் சுடர் |



மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | அருகில் மீன் பிடித்துக் கொண்டிருந்த 10 படகுகளிலும் மீன்களை கொள்ளையடித்தனர், 60 லிட்டர் டீசல் போட்டு 5500 ரூபாய் பணம் செலவழித்து சென்ற இடத்தில் உயிர் பிழைத்தால் போதும் என திரும்பி வந்து விட்டோம். என்று கூறினார். | | |
| 68. | 19.11.09 | **திண்டுக்கல் மாவட்டம்:** திண்டுக்கல் திருச்சி நான்கு வழிச்சாலைக்கு நிலம் கையகப்படுத்தும் பணி நடந்தது, இதில் நிலம் கையகப்படுத்தப்பட்ட தாமரைப்பாடியைச் சேர்ந்த ஒரவருக்கு ரூ17 லட்சம் கொடுக்கப்பட்டது. நிலத்தின் உரிமையாளர் தனக்கு பணம் கொடுக்கவில்லை என கலெக்டரிடம் புகார் கூறினார். விசாரணையில் நிலத்தின் உரிமையாளரிடம் பணம் கொடுக்காமல் வேறு நபருக்கு கொடுப்பட்டுள்ளது என்பது தெரிந்தது. பணத்தை பெற்றவர் தர மறுப்பதாலும் இதில் டி.எஸ்.பி.,சம்பந்தம் இருப்பதால் வருவாய்துறையினர் டி.எஸ்.பி., உட்பட 4 பேர் மீது மாவட்ட போலீஸில் புகார். போலீசார் டி.எஸ்.பிக்கு சாதகமாக செயல்படுவதாகவும், தங்கள் புகாரை வழக்கு பதிவு செய்ய மறுப்பதாக வருவாய் துறையினர் புகார். கூறியுள்ளனர். | லஞ்சம் | தினமலர் |
| 69. | 19.11.09 | **மதுரை மாவட்டம்:** செக்கானூரணி அருகே உள்ள செல்லம்பட்டி நாட்டாமங்கலம் பாண்டி(35) இவர் தந்தை பெயரில் உள்ள நிலத்தை இவர் பெயரில் மாற்றுவதற்கு பத்திரத்தின் நகல் தேவைப்பட்டது. பத்திரிப்பதிவு அலுவலர் கிரிதர் பத்திர நகல் வழங்க ரூ.500 லஞ்சம் கேட்டதாக புகார். பாண்டியிடம் ரூ500 கிரிதர் லஞ்சமாக வாங்கிய போது போலீசாரால் கைது செய்யப்பட்டார். | லஞ்ச ஊழல் | தினகரன் |
| 70. | 20.11.09 | **மதுரை மாவட்டம்:** விஸ்வநாதபுரத்தைச் சேர்ந்தவர் பரமேஸ்வரி இவரது கணவர் சந்திரசேகர், இவர்களுக்கு சில மாதங்களுக்கு முன்பு திருமணம் நடந்தது. கூடுதல் வரதட்சனைக் கேட்டு கொடுமைபடுத்தியதாக சந்திரசேகர், உறவினர் அழகர்சாமி, செல்வம் மற்றும் 7பேர் மீது பரமேஸ்வரி திரப்பரங்குன்றம் போலீஸில் புகார். போலீசார் 7பேர் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.<br>**மற்றொரு வழக்கு:**<br>மேலூர் அருகே புங்கம்பட்டியைச் சேர்ந்தவர் செட்டியபாண்டி, இவரது கணவர் சந்திரன், திருமணம் ஆகி 10 ஆண்டுகள் ஆகிறது. சந்திரன் மந்தையம்மாள என்பவருடன் | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ் முரசு |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | கள்ளத்தொடர்பு வைத்து குடும்பம் நடத்தி வந்தார் என்றும் அவர் இப்பொது கர்ப்பிணியாக உள்ளதாகவும். செட்டியபாண்டியை கூடுதல் வரதட்சனை கேட்டு கணவர் சந்திரன், உள்பட 6 பேர் சித்திரவதை செய்து கொலை மிரட்டல் விடுத்தனராம் இது குறித்து மேலூர் போலீஸில் புகார். சந்திரன் உட்பட 6 பேர் மீது வழக்கு பதிவு செய்துள்ளனர்.<br>மதுரை மாவட்டத்தில் 2 வரதட்சனைக் வழக்குகளில் 13 பேர் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர். | | |
| 71. | 20.11.09 | **தஞ்சாவூர் மாவட்டம்:** தஞ்சாவூர் வல்லத்தில் உள்ள பெரியார் மணியம்மை பல்கலைக்கழகத்தில் பி.டெக் தகவல் தொழில் நுட்ப பொறியியல் கல்லூரியில் (ஐ.டி.) முன்றாம் ஆண்டு படிப்பவர் கனவள்ளி, இவர் அருந்ததியர் இனத்தைச் சேர்ந்தவர். இவரது தந்தையால் கல்விக் கட்டணம், விடுதி கட்டணம் கட்ட இயலாத நிலையில் முதலமைச்சர் நிவாரணநிதிக்கு 20.12.07 மனு அனுப்பியும், இன்று வரை காத்திருப்போர் பட்டியலில் தனது பெயர் உள்ளது வருத்தமாக இருப்பதாக கனகவள்ளி கூறினார். தனக்கு பின் விண்ணப்பித்தவர்களுக்கு உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளதாகவும் கூறினார். | தலீத் எதிரான வன்முறை | தீக்கதிர் |
| 72. | 20.11.09 | **கோவை மாவட்டம்:** ஒத்தக்கால் மண்டபம் பேரூராட்சி இரண்டாவது வார்டு கவுன்சிலராக மார்க்சிஸ்ட் கட்சியின் தாலுகா குழு உறுப்பினர் எம்.பஞ்சலிங்கம் செயலாற்றி வருகிறார். மகளிர் சுய உதவிக்குழுவின் கூட்டத்திற்கு பங்கேற்க சென்றுள்ளார். அங்கு வந்த திமுக உறுப்பினர், ராமநாதன் தலீத் சாதியை இழிவாக பேசி தகராறில் ஈடுபட்டுள்ளார். இது குறித்த ராமநாதன் மீது போத்தனூர் காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டுள்ளது. | தலீத் எதிரான வன்முறை | தீக்கதிர் |
| 73. | 20.11.09 | **இராமேஷ்வரம் மாவட்டம்:** இந்திய மீனவர் மீது இலங்கை கடற்படையினர் தாக்குதல் நடத்தாத நாளில்லை, நேற்று முன்தினம் ராமேசுவரம் மீனவர்கள் 597 விசைப்படகுகலில் கடலுக்கு சென்றனர். இவர்களில் நூற்றுக்கும் மேற்பட்ட படகுகளில் மீனவர்கள் இந்திய கடல் எல்லையில் மீன் பிடித்துக் கொண்டிருந்தனர். அங்கு வந்த இலங்கை கடற்படையினர் பிரபு என்ற மீனவரை தாக்கி 20ஆயிரம் மதிப்புள்ள ஜி.பி.எஸ்.கருவி., செல்போன் மோதிரம் பறித்து, மீன்களையும் பறித்து, பாலியல் கொடுமை செய்து, இவர்களை விரட்டி அடித்தனர். தாக்குதலுக்கு உள்ளான மீனவர்கள் மார்ஷலின், பிரான்சிஸ் அலெக்சாண்டர், | மீனவர்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஸ்டாலின், இலங்கை கடற்படை அட்டூழியங்கள் தொடராமல், இருக்க முதலமைச்சர் இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும் என்று கூறினார் | | |
| 74. | 20.11.09 | **சென்னை மாவட்டம்:** கடல் மீன்பிடி தொழில் ஒழுங்குமுறை சட்டத்தை நிறைவேற்ற கூடாது என்று வைகோ கூறியுள்ளார். 12 கடல் மைல்களுக்கு அப்பால் மீன்பிடித்தால் ரூ9 லட்சம் அபராதம், 3ஆண்டுகள் சிறைத்தண்டனை என்று சட்டம் போட்டுள்ளனர். தமிழகத்தில் 10 மாவட்டங்களில் சுமார் ஒரு கோடி மக்கள் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டு உள்ளனர். கடலோடும், இயற்கை சீற்றங்களோடும் போராடி மீன்படித்து கரை சேர்கின்ற அவர்களை காக்க வேண்டிய அரச கடலுக்கு உள்ளே தள்ளிவிடுவது போல இச்சட்டம் இருக்கிறது என்று கூறினார். | மீனவர்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| 75. | 20.11.09 | **மதுரை மாவட்டம்:** செல்லூரில் திருவாய்ப்புடையார் மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி உள்ளது. தலைமை ஆசிரியர் வசந்தா, சில மாதங்களுக்கு முன் ஜெகன் என் பவர் உடற்பயிற்சி ஆசிரியராக நியமித்துள்ளார். இவர் மாணவர்களை அடித்தாகவும், திட்டியதாகவும் மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர், கல்வி அலுவலர் தனலட்சுமி கூறும்போது இப்பிரச்சனைக்கு தேவையான நடவடிக்கை எடுப்போம் என கூறினார். தலைமை ஆசிரியர் கூறும்போது மாணவர்கள் மத்தியில் கட்டுப்பாட்டை ஏற்படுத்துவதற்காக சில நடவடிக்கைகள் எடுத்தேன். பிடிக்காதவர்கள் தவறாக கூறுவதாக கூறினார். மாநகராட்சி துணை கமிஷனர், கூறும்போது குற்றச்சாட்டுக்கு ஆளான அசிரியர் பள்ளியில் இருந்து நீக்கப்பட்டார். என்றார். | பள்ளி வன்முறை | தினமலர் |
| 76. | 20.11.09 | **மதுரை மாவட்டம்:** செக்கானூரணி அருகே சிக்கம் பட்டியைச் சேர்ந்தவர் ரமேஷ்(17) இவர் செக்கானூரணி அரசு கள்ளர் மேல்நிலைப்பள்ளியில் பிளஸ்2 படித்து வந்தார். நேற்று பள்ளிக்கு வந்த இவர் நண்பர்களுடன் மதியம் சாப்பிட்டார். பின் குடிநீர் தொட்டி அருகே விஷத்தை குடித்தார், விஷம் குடித்ததை அறிந்த நண்பர்கள் ஆஸ்பத்திரிக்கு அழைத்து சென்றனர். செல்லும் வழியில் ரமேஷ் இறந்தார். இது குறித்து செக்கானூரணி போலீசார் விசாரித்து வருகின்றனர். | பள்ளி வன்முறை | தினமலர் |
| 77. | 20.11.09 | **தேனி மாவட்டம்:** உத்தமபாளையம் ஆனைமலையன் பட்டியைச் சேர்ந்தவர் தங்கபாண்டி மனைவி ரங்கம்மாள்(26), இரண்டு | அரசு ஊழியர்கள் அலட்சியம் | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | குழந்தைகள் உள்ளனர். முன்றாவதாக ரங்கம்மாளுக்கு பிரசவ வலி ஏற்பட்டது. அருகில் உள்ள சுகாதார நிலையத்து சென்றனர் டாக்டர் இல்லாததால் நர்சுகள், ரங்கம்மாளை சிறிது நேரம் காத்திருக்குமாறும் வாசலில் நடந்து கொண்டிருக்கும் படி கூறினர். பிரசவ வலியால் துடித்தவருக்கு வாசலிலேயே பெண் குழந்தை பிறந்து கிழே விழுந்தது அவருக்கு ரத்தபோக்கு ஏற்பட்டு உடன் வந்த ஆண்கள் வேட்டியை வாங்கி மறைத்து நின்றனர், இவ்வளவு நடந்த பிறகு உள்ளே அனுமதித்தனர். இதனால் உறவினர்கள் பொதுமக்கள் ஆஸ்பத்திரியில் முற்றுகை போராட்டம் நடத்தினர். | | |
| **78.** | 20.11.09 | **ஈரோடு மாவட்டம்:** பெருந்துறை காவல்நிலையத்தில் பணிபுரிந்து வருபவர் மேகநாதன், சித்தோடு காவல் நிலையத்தில் பணிபுரிபவர் ஞானசேகரன், இருவரும் அதிகஅளவு மது குடித்துவிட்டு வெள்ளோட்டில் இருந்த ஈரோடு செல்ல நின்றபோது அந்த வழியாக சென்ற பிற்படுத்தப்பட்ட அரசு ஆண்கள் விடுதியில் தங்கி படித்து வந்த சூரியபிரகாஷ், ஜெகநாதனை , பிரபு, ஆபிரகாம் ஆகியோரை தாக்கியதாகவும், போலீசார் போதையில் இருந்ததால் அவர்கள் ஏமாற்றுவதாக நினைத்து மாணவர்கள் போலீசார் என்பது தெரியாமல் அவர்களை தாக்கியுள்ளனர், பொதுமக்களும் தாக்கியுள்ளனர். இது குறித்து வெள்ளோடு போலீசார் இரு போலீசாரையும் மீட்டு ஈரோடு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். | மாணவர்களுக்கு எதிரான வன்முறை & காவலர்களுக்கு எதிரான வன்முறை | தமிழ் சுடர் |
| **79.** | 20.11.09 | **மதுரை மாவட்டம்:** ஜெய்ஹிந்தபுரம் பகுதியைச் சேர்ந்தவர் கிருஷ்ணன் இவரது மகள் கார்த்திகா(18), இவர் வீட்டில யாரும் இல்லாத நேரத்தில் உடலில் மண்ணெண்ணெய் உற்றி தற்கொலை செய்து கொண்டார். இது குதறித்து ஜெய்ஹிந்தபுரம் போலீசார் விசாரித்து வருகின்றனர். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ் சுடர் |
| **80.** | 20.11.09 | **விழுப்புரம் மாவட்டம்:** திண்டிவனம் காவேரி பாக்கத்தைச் சேர்ந்தவர் ராமச்சந்திரன் இவரது மனவைி கஸ்தூரி, இவர்களது மகள் பவானி(3) அங்குள்ள நர்சரி பள்ளியில் படித்து வந்தாள். நேற்று விளையாட சென்ற குழந்தை பல இடங்களில் தேடியும் வீடு திரும்பவில்லை இது குறித்து போலீசில் ராமசந்திரன் புகார் செய்தார். காவேரிபாக்கம் நடுநிலைப்பள்ளி பின்புறம் முட்புதரில் பவானி ரத்தகாயங்களுடன் இறந்து கிடந்தார். யாரோ கடத்தி பாலியல் பலாத்காரம் செய்து கொலை செய்தது தெரியவந்தது விசாரணையை தீவிரப்படுத்தியுள்ள போலீசார் | குழந்தைகளுக்கு எதிரான வன்முறை | தமிழ் முரசு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கொலையளிளை தேடி வருகின்றனர். | | |
| 81. | 20.11.09 | **தேனி மாவட்டம்:** கேரள மாநிலத்தைச் சேர்ந்த சுபாஷ் இவரது மனைவி சிஜி(30), மகன் அஸ்வின்(3) இப்பகுதியில் உள்ள தோட்டத்தை குத்தகை எடுத்து சுபாஸ் விவசாயம் செய்து வந்தார். தந்தையின் மருத்துவசெலவுக்கு பலரிடம் கடன் வாங்கினார். கடன் தொகையை திருப்பி செலுத்த முடியாமல் அவதிப்பட்ட சுபாஷ், மனைவி, மகன் முன்று பேரும் விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்டனர். தந்தையின் மருத்துவ செல்விற்கு வங்கிய பணத்தை அவரது தம்பி சதீஸ்(22), சுதீஸ்(18), தாய்மாமன் சந்தோஷ், பகிர்ந்து கொள்வதாக கூறி கடைசியாக சுபாஷையே ஏற்றுக் கொள்ளுமாறு வற்புறுத்தியுள்ளனர், உத்தமபாளையம் டி.எஸ்.பி.கலைமோகன் நடத்திய விசாரணையில் தெரிய வந்தது. அதனால் 3 பேர் மீதும் தற்கொலைக்கு தூண்டியதாக போலீசார் வழக்கு பதிவு செய்துள்ளனர். | கடன் தொல்லை | தினகரன் |
| 82. | 21.11.09 | **மதுரை மாவட்டம்:** விருதுநகர் முல்லைத்தெரு என்.ஜி.ஓ.நகரைச் சேர்ந்த சங்கரநாரணன் இவர் ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் இவரது மனைவி சாந்தா(49), இருவரும் திருப்பரங்குன்றம் வந்து விடுதி ஒன்றில் தங்கினார். காலையில் விடுதியை காலி செய்வதாக கூறிய அவர்கள் நீண்ட நேரமாக கதவை திறக்கவில்லை. பின்னர் விடுதி மேலாளர் ரூமிற்குச் சென்று பார்த்தபோது மருந்து வாடை வீசியது. திருப்பரங்குன்றம் போலீசாருக்கு தகவல் கொடுத்தனர். விரைந்து வந்த போலீசார் கதவை உடைத்தனர். அப்போது சங்கரநாரயணன் பிணமாக கிடந்தார். மனைவி உயிருக்கு போராடிக் கொண்டிருந்தார். மருத்துவமனைக்கு செல்லும் வழியில் இறந்தார். இது குறித்து திருப்பரங்குன்றம் போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். கடன் தொல்லையால் இறந்தாக உறவினர்கள் தெரிவித்தனர். | கந்த வட்டி | தினத்தந்தி |
| 83. | 21.11.09 | **ஈரோடு மாவட்டம்:** வெள்ளோட்டில் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி சென்னி மலையைச் சேர்ந்த சூரிய பிரகாஷ், பெருந்துறை ஆபிராகம், பிரபு ஆகிய முவரும் 10 வகுப்பு படித்து வருகின்றனர். போலீஸ் ஏட்டு ஞானசேகரன், மேகநாதன் இருவரும் போதையில் மாணவர்களை தாக்கியதால் அவ்வூர் பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் அவர்கள் போலீஸ் என்பது தெரியாமல் தாக்கி இருவரையும் வெள்ளோடு போலீஸ் ஸ்டேஷனில் | காவல் நிலைய வன்முறை | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஒப்படைத்தனர். அவர்கள் இருவரையும் சஸ்பெண்ட் செய்து ஈரோடு எஸ்.பி. ஜெயச்சந்திரன் உத்தரவிட்டார். | | |
| 84. | 21.11.09 | **தேனி மாவட்டம்:** ஆண்டிப்பட்டியைச் சேர்ந்தவர் ஜோசப்ராஜ் இவரது மனைவி விஜயா, இவர்களது மகன் ராஜா(31), குஜராத் மாநிலம் பரோடாவில் தொழில் செய்யும் மனோகரன் மகள் உதயலட்சுமி(28), இருவருக்கும் திருமணம் நடந்தது. திருமணம் முடிந்தவுடன் ஆண்டிபட்டியில் உள்ள தனது வீட்டில் மனைவி உதயலெட்சுமியை விட்டு சென்றார். கூடுதல் வரதட்சனைகேட்டு மாமியார், மாமனார், நாத்தனார், கொடுமைபடுத்தி அவரது பெற்றோர் வீட்டுக்கு அனுப்பி வைத்தனர். இது குறித்து ஆண்டிபட்டடி போலீஸில் உதயலெட்சுமி புகார் செய்தார். போலீஸார் கணவர் ராஜா. மாமனார் ஜோசப்ராஜ, மாமியார் விஜயா, அவரது தங்கை 4 பேர் மீது வழக்கு பதிவு செய்தனார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 85. | 21.11.09 | **இராமேஸ்வரம் மாவட்டம்:** சங்குமால் கடற்கரை பகுதியில் இருந்து அந்தோனிசாமி என்பவருக்கு சொந்தமான படகில் மீனவர்கள் ரெமின்ஸ்டன், இன்னாசி, ஸ்டாலின், ரஞ்சித் உட்பட 5 பேர் மீன்பிடித்து கொண்டிருந்தபோது இலங்கை கடற்படையினர் இவர்கள் படகில் நுழைந்து மீனவர் ரெமின்ஸ்டனை சூழ்ந்து ஷூ காலால் மிதித்து தள்ளியதில் சைலன்சரில் மோதியதில் ரெமின்ஸடனுக்கு பலத்த தீக்காயம் ஏற்பட்டு மற்றும் மீனவர்களை தாக்கி மீன்களை கடலில் கொட்டி வலைகளை சேதப்படுத்தி விட்டு சென்றதாக மீனவர் ஸ்டாலின் கூறினார். | மீனவர்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 86. | 21.11.09 | **திருச்சி மாவட்டம்:** மதுரை மாவட்டம் மேலவளவு கொலை சம்பவத்தில் ஆயுள் தண்டனை பெற்றவர் ராமர்(50) திருச்சி சிறையில் உள்ளார். சிறையில் உள்ள ராமர் செல்போனில் பேசுவதாக சிறைகாவலர் மலர்வண்ணனுக்கு தகவல் வந்தது. அவர் வருவதை பார்த்த கைதி கணேசன், ராமரின் கூட்டாளியான முத்துவுக்கு தகவல் கொடுத்தார் முத்துவும் ராமரிடம் போனை வாங்கிக் கொண்டார். இதை கவனித்த மலர்வண்ணன் முத்துவை சோதனைசெய்தார். இதற்கு மறுப்பு தெரிவித்த முத்து வாக்குவாதத்தில் ஈடுபட்டார். திடீரென குண்டு கணேசன். முத்து ஆகியோர் மலர்வண்ணனை தாக்கினர். மற்ற காவலர்கள் அவரை கைதிகளிடமிருந்து காப்பாற்றினார். இது குறித்து மலர்வண்ணன் கே.கே.நகர் போலீசில் புகார். கைதிகள் 2 பேர் மீதும் வழக்கு பதிவு செய்து விசாரணை நடந்து வருகிறது. | சிறைச்சாலை வன்முறை | தமிழ் முரசு |

| | | | | |
|---|---|---|---|---|
| 87. | 21.11.09 | **மதுரை மாவட்டம்:** செக்கானூரணி போலீஸ் சரகம் காமாட்சி நகரைச் சேர்ந்தவர் முருகன் அவரது மகள் ஜோதிகா(19) கருமாத்தூரில் படித்து வருகிறார். கல்லூரிக்கு செல்வதாக சென்ற ஜோதிகா வீடு திரும்பவில்லை பல இடங்களில் தேடியும் கிடைக்கவில்லை இது குறித்து ஜோதிகா தாய் லோகமணி செக்கானூரணி போலீஸில் புகார். செய்தார். மனுவில் செக்கானூரணியைச் சேர்ந்த முத்து தனது மகளை கடத்தி சென்றதாக கூறியுள்ளார். இது குறித்து போலீஸார் ஜோதிகாவை கடத்திய முத்துவை தேடி வருகிறன்றனர். | பெண்களுக்கு எதிரான வன்முறை | மாலை மலர் |

மக்கள் கண்காணிப்பகம்